### மருத்துவர் பாலாஜியிடம்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் நலம் விசாரித்தார்!

சென்னை, நவ. 14 -

சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவர் பாலாஜி என்பவரை சிகிச்சை பெற்று வந்த பெண்ணின் மகன் விக்னேஷ் கத்தியால் குத்திய சம்பவம் பெறும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தாக்கப்பட்ட மருத்துவரை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உள்ளிட்டோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

இந்நிலையில் சென்னை கிண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மருத்துவர் பாலாஜியிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி வாயிலாக நலம் விசாரித்துள்ளார்.

அப்போது, மருத்துவர் பாலாஜியின் உடல்நலம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.



இன்று நடைபெற உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தூத்துக்குடி மாவட்டத்திற்கு சென்றடைந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (13.11.2024) தூத்துக்குடியில் அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பில் அவரது வாகனம் மக்கள் கடலில் நீந்திச் சென்றது.

### பள்ளிகளில் 10,000 போலி ஆசிரியர்களைக் கொண்டு பாடம் நடத்துவதாக

# சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது!

## பள்ளிக் கல்வித்துறை மறுப்பு!

சென்னை, நவ. 14 -

7.11.2024 நாளிட்ட செய்தித்தாளில் ஒன்றில் வெளிவந்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளபடி, தருமபுரி மாவட்டம், அரூர் கல்வி மாவட்டம், காரிமங்கலம் ஒன்றியம் இராமியாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த கே.பாலாஜி என்பார், தனக்கு பதிலாக வேறொரு நபரைக் கொண்டு வகுப்பறையில் பாடம் நடத்தியதால் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்.

மேற்காணும் பொருள் குறித்து தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் பள்ளியில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு; ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் பணிகளை மேற்கொள்ளாமல் வெளிநபரைக் கொண்டு மாணவர்களுக்கு கற்பித்தல் பணி நடத்துவது குறித்து, பள்ளி ஆண்டாய்வு மற்றும் பள்ளிப் பார்வையின் போது ஏதேனும் கண்டறியப்பட்டாலோ அல்லது இது குறித்த புகார்கள் ஏதேனும் பெறப்பட்டாலோ கண்டிப்பாக அப்புகார் மீது தனிக்கவனம் செலுத்தி மாவட்டக் கல்வி அலுவலரே (தொடக்கக் கல்வி) விசாரணை மேற்கொண்டு, அவ்விசாரணையில் உண்மையிருப்பின் சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு இறுதியாணை பிறப்பிக்கப்பட வேண்டும். பள்ளிகளில் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படும் போது அத்தகவலை மாவட்டக் கல்வி அலுவலருக்கு அளிக்கத் தவறும் பட்சத்தில், தலைமை ஆசிரியர் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர் ஆகியோர் மீதும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தொடக்கக் கல்வி அலகில் தகுதியுள்ள காலிப்பணியிடத்தில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் (SMC) நியமனம் பெற்ற 6053 எண்ணிக்கையில் உள்ள தற்காலிக ஆசிரியர்கள் தவிர, வேறு ஏதேனும் நபர்கள் பணிபுரிந்து வருகிறார்களா என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களிடமும் அறிக்கை கோரப்பட்டது.

இவ்வியக்ககச் செயல்முறைகள் அனுப்பப்பட்ட நிலையில், மாவட்டக் கல்வி அலுவலரின் ஆளுகைக்கு உட்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்களிடமிருந்து வேறு நபர்களைக் கொண்டு கற்பித்தல் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்கள் குறித்த விவர அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

ஆகையால், மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படாத நிலையில், சமூக ஊடகங்களில் வரப் பெற்ற செய்தி முற்றிலும் உண்மைக்கு மாறான செய்தியாகும். அச்செய்திக் குறிப்பில் குறிப்பிட்டவாறு 10,000 போலி ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களுக்கு கற்பித்தல் பணிகள் நடைபெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறது எனறு பள்ளிக் கல்வித் துறை வெயிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### தி.மு. கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, நவ.14-

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில், 16-11-2024 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் அறிவித்துள்ளார்.

### ரூ.46 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பில்

# நியாய விலைக் கடை கட்டிடம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருவள்ளூர். நவ.14

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதி, எல்லாபுரம் மத்திய ஒன்றியம், கன்னிகாபுரம் ஊராட்சியில் நியாய விலை கடை கட்டிடம் கட்டித் தருமாறு ஊராட்சிமன்ற தலைவர் லட்சுமிமுரளி பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமியிடம் கோரிக்கை வைத்தார். இந்நிலையில்,சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024 2025ம் ஆண்டு நிதியில் ரூ.16 லட்சம் ஒதுக்கி நியாய விலை கடை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது இதில் கன்னிகாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமிமுரளி, தலைமை தாங்கினார்.

எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக செயலாளர் கோடுவெளி தங்கம்முரளி, எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் ராமகிருஷ்ணன்,பொறியாளர் நரசிம்மன், ஒன்றிய குழு உறுப்பினர் தனலட்சுமிமுனுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. கன்னிகாபுரம் ஊராட்சியில் பொது விநியோக திட்டத்துக்கு நியாய விலை கடை கட்டிடத்தையும், திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அதனை தொடர்ந்து ஆயிலச்சேரி ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 20242025ம் ஆண்டு நிதியில் ரூ.30 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம் அலுவலகத்தை திறந்து வைத்தார் .

### பி.டி.பாண்டிசெல்வம் - நொளம்பூர் வெ.ராஜன் பங்கேற்பு

# மதுரவாயல் வடக்குப் பகுதி 92-வது வட்ட ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் அறிக்கை

சென்னை, நவ. 14 -

மதுரவாயல் வடக்குப் பகுதி 92-வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இது குறித்து வட்டச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் இன்று (14-11- 24 வியாழன்கிழமை ) மாலை 6.00 மணியளவில் முகப்பேர் ரோட்டில் வெல்கம் பேலஸ் மண்டபத்தில் வட்டக் கழகச் செயலாளர் எம். எம். ஜெயரத்தினம் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி துணை செயலாளர் எம்.ஏ. செந்தில்சுரேஷ் முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன், மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழில்அரசு ஆகியோர் வரவேற்புரை ஆற்ற இக்கூட்டத்திற்கு தலைமை கழக தொகுதி பொறுப்பாளரும், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் பாண்டி செல்வம், மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும், வளசரவாக்கம் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு

ஆலோசனை வழங்க உள்ளார்கள் இக்கூட்டத்திற்கு 92 வது வட்டத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள்(BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்டச் செயலாளர் எம் எம் ஜெயரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார் இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி மற்றும் கழக ஆக்கப்பூர்வமான பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு வட்டச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தெரிவித்துள்ளார்.

### சாய்ஜெயகாந்தன் - துரை கபிலன் ஆலோசனை வழங்குகின்றனர்!

# வேளச்சேரி 179, 179 ‘அ’ வட்டக் கழக (BLA2) பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டக் கழக செயலாளர்கள் ஆ.பாண்டியன் - எஸ்.ஜெயக்குமார் அறிக்கை!

சென்னை, நவ. 14-

வேளச்சேரி கிழக்கு பகுதி 179, 179 (அ) வட்டக்கழக செயலாளர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

வேளச்சேரி கிழக்கு பகுதி 179, 179(அ) வட்டக் கழக பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2 ) ஆலோசனை கூட்டம் இன்று (14.1.2024 - வியாழக்கிழமை) மாலை 06.00 மணியளவில் திருவான்மியூர் சித்திரை குளம் வீதி இந்தியன் வங்கி அருகில் மகாலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வேளச்சேரி தொகுதி பொறுப்பாளர் சாய் ஜெயகாந்தன் (சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர்) மற்றும் பகுதிக் கழக செயலாளர் துரை கபிலன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்க உள்ளனர்.

எனவே வேளச்சேரி கிழக்குப் பகுதிக்கு உட்பட்ட பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து பாக முகவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்ட கழக செயலாளர்கள் ஆ.பாண்டியன்,

எஸ்.ஜெயக்குமார் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### சென்னை தெற்கு மாவட்டம் - வேளச்சேரி மேற்கு பகுதி

# 176வது வட்ட பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்!

## வட்ட கழக செயலாளர் எஸ்.முருகவேல் தலைமையில்!

சென்னை, நவ.14-

சென்னை தெற்கு மாவட்டம் - வேளச்சேரி மேற்கு பகுதி 176வது வட்ட பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் வட்ட கழக செயலாளர் எஸ்.முருகவேல் தலைமையில் கங்கை நகர் 3 வது தெரு, (இன்று 14.11.2024 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

ஆலோசனை வழங்க வருகைதரும் வேளச்சேரி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர்.சாய் ஜெய் காந்த பாரதி வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர் அரிமா சு.சேகர் 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வே.ஆனந்தம் ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட,பகுதி அணைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,பாக முகவர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி 176 வது வட்ட கழக செயலாளர் எஸ். முருகவேல் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம்!

## தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் 18-11-2024 திங்கட்கிழமை, மாலை 3.00 மணி அளவில் ஈரோடு மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயத்தில்” கழக விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும் வீட்டு வசதித் துறை அமைச்சர் எஸ். முத்துசாமி மற்றும் விவசாய அணி துணைத் தலைவர்கள் இரா.தமிழ்மணி, எஸ்.கே.வேதரத்தினம் விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ். அப்துல்காதர், நாகை ஆர்.அருட்செல்வன், கள்ளிப்பட்டி மணி, மா.முத்துராமலிங்கம், பா.செந்தமிழ்செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் விவசாய அணி துணைச் செயலாளர்கள் முதுகுளத்தூர் கே.முருகவேல், ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர். கணேசன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், டி.எம். அரியப்பன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என். மணி, இராமநாதபுரம் என்.நல்லசேதுபதி, திருப்பத்தூர் கே.புருஷோத்தமன், கள்ளக்குறிச்சி த.சித்தார்த்தன், சூடப்பட்டி சுப்பிரமணியன், பா.குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: நவம்பர் 27 -தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள், அணியின் வளர்ச்சி ஆக்கப் பணிகள் -குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 13.11.2024

**ஏ.கே.எஸ்.விஜயன்,**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.

# 39(அ) வட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் !

## வட்டச் செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் அறிக்கை !

சென்னை நவ.13

39(அ) வட்டச் செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடக்கு மாவட்டம்,ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39 (அ) வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் (பிஎல்ஏ2) ஆலோசனைக் கூட்டம் இன்று (14.11.2024 வியாழக்கிழமை) மாலை 5.00 மணியளவில் பிஎஸ்எஸ் தனுஷ்கோடி இல்லம் நெ223/69 திருவொற்றியூர் நெடுஞ்சாலை புதுவண்ணை சென்னை 81ல் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வாக்காளர் சேர்ப்பு முகாம் (16.11.24 சனிக்கிழமை) மற்றும் (17.11.24 ஞாயிற்றுக்கிழமை) மற்றும் (17.11.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் வாக்காளர் சேர்ப்பு முகாம் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஏழை எளியோருக்கு திருமணம் நடத்தி வைக்க வருகை தரும்

துணை முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

எனவே கூட்டத்தில் நமது வட்டத்துக்குட்பட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்ட செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# உதகை நகரத்தில் வாக்குச் சாவடி பாக முகவர்கள் தீவிரமாக பணியாற்ற முடிவு!

## ஜார்ஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

உதகை, நவ. 14 -

உதகை நகர தி.மு.க. செயற்குழுக் கூட்டம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. நகர அவைத் தலைவர் ஜெயகோபி தலைமை வகித்தார். நகரச் செயலாளர் ஜார்ஜ் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, நகர துணைச் செயலாளர்கள் கார்டன் கிருஷ்ணன், இஸ்மாயில் ரீட்டாமேரி, நகர பொருளாளர் அணில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதிகள் வெங்கடேஷ், தம்பி இஸ்மாயில், கார்த்திகேயன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் நகர்மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு

எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலை உதகை நகரத்தில் உள்ள 79 வாக்கு சாவடி பாக முகவர்கள் (BLA 2) அவர் அவர்களது வாக்கு சாவடியில் எதிர்வரும் 16,17-112024 மற்றும் 23,24-112024 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் நடைபெறவுள்ள வாக்காளர் சிறப்பு முகாமில் கழக தோழர்களுடன் இணைந்து வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல், இடமாற்றம் போன்ற பணிகளை செவ்வனே மேற்கொண்டு தி.மு.கழகம் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற இந்நாள் முதலே கழக பணிகளை செய்திட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு துணை முதல்வரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் 27.11.2024 அன்று கொண்டாடுவதை முன்னிட்டு உதகை நகரில் ஏழை எளிய பள்ளி மாணவர்கள், ஆதரவற்றோர், முதியோர்கள் மற்றும் மாற்று திறனாளிகள் போன்றவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிப்பது எனவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இவ்வாறு அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.




உதகை நகரக் கழகக் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் நகரச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் கழக நிர்வாகிகளிடம் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி பேசினார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை மூன்று சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 7, 8 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு.

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 14/11/2024 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | 8 | தென்காசி | ஸ்ரீ சாரதாம்பா திருமண மண்டபம், இலஞ்சி, தென்காசி மாவட்டம். |
| | மாலை 4.00 மணி | | கடையநல்லூர் | எஸ்.எஸ்.கிராண்ட் மஹால், அச்சம்பட்டி பேருந்து நிலையம் அருகில், கடையநல்லூர் – தென்காசி பிரதான சாலை, தென்காசி மாவட்டம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில் இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09-11-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி